# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 443/2016
## வழக்கு சாட்சி PW-9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமித்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராஜன் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| கிராமம் | : | சென்னை | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 5th, 2026.

**(2, 4, 5, 6, 7, 8 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 1, 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சென்னையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மருதையா மற்றும் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு சண்டை நடந்ததாக கேள்விபட்டேன். யார், யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் குறித்து வேறு எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 15.02.2013ம் தேதி, இரவு 09.00 மணிக்கு நானும், தங்கப்பாண்டியனும், முகேஷிம் சுந்தரவிநாயகர்கோவில் தெரு பக்கம் நின்று கொண்டிருந்தபோது, டீ.எஸ்.பி மருதையாவும், அவரது மகன் ராஜேந்திரனும் காரிலிருந்து

இறங்கினார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் அவர்களை வழிமறித்து டீ.எஸ்.பி மருதையாவையும், அவரது மகன் ராஜேந்திரனையும் வண்டிலிருந்து இறங்க விடாமல் தடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரி சதீஷ் கல்லால் டீ.எஸ்.பி மருதையாவின் காரின் கண்ணாடியை உடைத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி இசக்கிபாண்டி, டீ.எஸ்.பி மருதையாவை பார்த்து "அவரை கொல்லுங்கள்" என்று சொல்லி கம்பியால் அடித்தார் என்றால் சரியல்ல. காவேரி சுப்பையாபாண்டியன் மருதையாவின் தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. எதிரி திருமலைக்குமார், ராஜேந்திரனின் கழுத்தை பிடித்துக்கொள்ள இசக்கிபாண்டியன் கம்பியால் ராஜேந்திரனின் தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி சென்னை சிட்டி சிவில் நீதிமன்றம் காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. Vishalatchi, Assistant Programmer சென்னை சிட்டி சிவில் நீதிமன்றம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 1,3 எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:41:59 +0530